மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன்கிழமை

இ.மஎண்.05/2025
உள்
RLTOP No.06/2023

--------

1. ஆனந்தராஜன்
2. பிரேம்ராஜன்
3. பிரபுராஜன் ..மனுதாரர்கள்/மனுதாரர்கள்

/எதிர்/

1. M/S. ஸ்ரீதேவி டயர்ஸ்,
அதன் உரிமையாளர் மூலம்
2. அசோக்ராஜன் .. எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 27.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. மாரிமுத்து, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை மனு அவிடவிட் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9 ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், இம்மனுவினை ஏற்று மனுதாரர்களின் தவறுகையினால் கடந்த 04.09.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்ட ஷை எண் அசல் மனுவினை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிடக்கோரி கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்ள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்</u>**:–

2.1. மனுதாரர் இந்த மனுவில் 1 ம் மனுதாரர்/1 ம் மனுதாரர் ஆவார். மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஷை எண் அசல் வழக்கு கடந்த 04.09.2024 ம் தேதி மனுதாரரின் தோற்றத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு ஏற்பட்ட கடுமையான வயிற்று

வலியினால் மனுதாரரால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை முன்னெடுத்து செல்ல இயலவில்லை. மனுதாரரது மூத்த வழக்கறிஞரும் உடல்நிலை சரியில்லாமல் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்ததால் மனதாரரது வழக்கறிஞருக்கும் தகவல் சொல்ல இயலவில்லை. இச்செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமான ஒன்றாகும். ஷை அசல் வழக்கினை மீண்டும் கோப்புக்கு எடுக்காவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டமும் ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஏற்படும். எனவே மனு தாக்கல்.

3) **<u>எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம்:-</u>**

3.1. இதனடியில் வியக்கத்தக்கமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மனு அபிடவிட்டில் குறிப்பிடும் சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பான காரணத்தால் அவை முற்றிலும் மறுக்கப்படுகிறது. தாவா வழக்கில் இம்மனுதாரருக்கு எவ்வித நியாயமான கட்சியும், முகாந்திரமும் கிடையாது. அதன் காரணமாக மனுதாரர் தாவா வழக்கினை மேல் நடத்தாமல் விட்டுவிட்டு உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் உத்தேச பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவை கடந்த 02.07.2024ம் தேதி அனுமதித்த பின்பு உரிய கால கட்டத்தில் மேற்படியார்களை தரப்பினர்களாக அசல் மனுவில் சேர்க்க சீர்திருத்த மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு தற்போது காலம் கடந்து அதைப்பற்றி மறைத்து எதையும் தெரிவிக்காமல் மோசடியாக உண்மைக்குப் புறம்பாக சங்கதிகளை கொண்டு மட்டுமே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3.2. மனுதாரர்கள் மேற்படி சீர்திருத்த மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யாத காரணத்தினாலேயே கடந்த 04.09.2024ம் தேதி தாவா வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. அதைப்பற்றி எதுவும் குறிப்பிடாததிலிருந்து மனுதாரர் சுத்த கரங்களோடு மனுவை தாக்கல் செய்யவில்லை. சமூகம் நீதிமன்றம் சீர்திருத்த மனுவை தாக்கல் செய்ய 10.07.2024, 22.07.2024, 07.08.2024, 10.08.2024, 04.09.2024 என பல்வேறு காலகட்டத்தில் தக்க வாய்ப்பு வழங்கிய நிலையில் இம்மனுதாரர் தாவா வழக்கில் சீர்திருத்த மனு எதுவும் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே விட்டுவிட்டு தற்போது அவ்விவரத்தையும் மறைத்து மேற்படி சீர்திருத்த மனுவும் தாக்கல் செய்யாமல்

தாவா வழக்கில் 04.09.2024 ல் பிறப்பித்த தள்ளுபடி உத்தரவை மட்டும் ரத்து செய்ய கோரி மனு செய்ய மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. அவை சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல.

3.3. தாவா மனுவை தாக்கல் செய்ய இம்மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. இவ்எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் எக்கால கட்டத்திலும் கட்டிட உரிமையாளர், வாடகைதாரர் என்ற உறவுமுறையே இருந்தது கிடையாது. அவ்வாறு இருக்கும்பட்சத்தில் இவ்எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. மனுதாரர் தாவா மனுவில் எவ்வித நியாயமான காரணமும் குறிப்பிடாமல் கடுமையான வயிற்றுவலி என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார். அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் தாவா மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல.

3.4. தாவா வழக்கில் சொத்தைப் பொறுத்து இம்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சார்பு நீதிமன்றம், சாத்தூர் அ.வ.எண்.33/2021 ல் கடந்த 24.06.2024 அன்று தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பித்துள்ளது. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நாளது தேதி வரை ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது. அவ்வாறான சூழ்நிலையில் இம்மனுதாரர் தாவா மனுவை மேல் நடத்தாமல் விட்டுவிட்டு தற்போது மனுதாரர் காலம் கடந்த இவ் எதிர்மனுதாரருக்கு எதிராக தபசில் சொத்தைப் பொறுத்து தாவா மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரை அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற நோக்கிலும், நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணாக்க வேண்டுமென்ற தீய எண்ணத்திலும் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7) தீர்வு:-**

7.1. மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கு கடந்த 04.09.2024 ம் தேதி மனுதாரரின் தோற்றத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு ஏற்பட்ட கடுமையான வயிற்று வலியினால் மனுதாரரால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை முன்னெடுத்து செல்ல இயலவில்லை. மனுதாரரது மூத்த வழக்கறிஞரும் உடல்நிலை சரியில்லாமல் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்ததால் மனுதாரரது வழக்கறிஞருக்கும் தகவல் சொல்ல இயலவில்லை. இச்செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே மனு தாக்கல்.

**7.2.** எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை ஆட்சேபணையில், தாவா அசல் வழக்கை வேண்டுமென்றே வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

7.3. மனுதாரருக்கு ஏற்பட்ட கடுமையான வயிற்று வலியினால் நீதிமன்றததில் ஆஜராக இயலவில்லை என்று சொல்லியுள்ள காரணம் குறித்து மருத்துவர் சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி மனுதாரருக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது என மனுவில் சொல்லியுள்ள காரணம் போதுமானதாக இல்லை. இருந்த போதிலும் வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கு மனுதாரர்கள் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**8. இறுதி முடிவு**

இறுதியாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரூ.700/-ஐ, 24.04.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 24.04.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.05/2025
உள்
RLTOP No.06/2023
**<u>உத்தரவு</u>**
நாள்– 15.04.2026.